
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 11 மார்ச்சு - 1998 இதழ் - 3




வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

# ஆசானின் அறிவுரையிலே


1. நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன் 1
2. ஆராதனையிலிருந்து நாம் எதை எடுத்து வரவேண்டும் 8
3. பெண்கள் பகுதி 11
4. திரும்பி வா 15
5. உங்களுடைய பக்தியை சோதித்தறியுங்கள் 18
6. ஆமோஸ் தீர்க்க தரிசன புத்தகம் 21
7. உங்களுக்கு ஒரு வேதாகமம் தேவை 22
8. ஆவியின் கனி - நற்குணம் 27
9. பிலிப்பு பட்டணம் 30
10. கொர் நெலியு 31

# THIRUMARAI AASAAN

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 11** **MARCH - 1998** **Issue -3**


*ஆசிரியர் உரை*

# "நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன்"

உலகத்தைப் பாவத்தின் பிடியிலிருந்து மீட்கும்படியாய் வானத்திலிருந்து இறங்கி வந்த இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்து, ஒரு "மா போதகர்" என்பதை எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்வர். ஒருவேளை மார்க்கரீதியாக இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் கூட இக்கருத்தை மறுப்பதில்லை. ஏனெனில், அவருடைய பிரசங்கம் மற்றும் பேச்சுக்கள் இப்பூமியில் ஏற்படுத்திய தாக்கம் அவ்வளவு மகத்தானது. மண்ணில் பிறந்த வேறு எவருடைய தகுதியும் இவரோடு ஒப்பிடத்தக்கவைகளே அல்ல.

பொதுவாக, ஒரு பேச்சாளன் மக்களின் மனதைக் கவர்ந்து, ஜனங்களின் அங்கீகாரத்தைப் பெற்று, புகழ் ஏணியில் ஏறுவதற்குப் பல தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். வாக்கு வன்மை, நா நயம், வார்த்தை வளம், கருத்தாழம் இன்னும் பேச்சிலே வேகம், எடுத்தியம்புவதில் விவேகம், சமயோசிதம், சொல்லாட்சியில் முடிசூடா தன்மை என்று இப்பட்டியலை நீட்டித்துக் கொண்டே போகலாம். இத்தகுதிகளை பெருமளவு பெற்றிருந்த பலர் இம்மண்ணில் வாழ்ந்து மறைந்துள்ளனர். ஆனால், இவர்கள் பெரும்பாலோருடைய பேச்சுக்கள் காலத்தால்

கரைந்து, சாரம் குறைந்து, சரித்திரத்தின் பக்கங்களிலிருந்து மங்கி மறைந்துவிட்டது. இத்தனைக்கும் இவர்களில், மிகப் பலர் உலகத்தின் பல பாகங்களுக்குச் சென்று தங்களது சொற்பொழிவுகளை மேற்கொண்டவர்கள்.

ஆனால், தன்னுடைய வாழ்நாளில் 200 மைல்களுக்கு அப்பால் பிரயாணம் செய்திராத இயேசுவின் பேச்சுக்கள் இன்றும் அதன் புகழ் மணம் மாறாமல் பிரசங்க வானில் மின்னிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் அவரிடமிருந்த விசேஷித்த தகுதிகள் தான். ஆம், மக்களின் மனநிலையை உணர்ந்து, காலச் சூழலைக் கருத்தில் கொண்டு, எதிர்பார்ப்புகளைக் கணக்கிலெடுத்து, குறிப்பாக ஆன்மீகத் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசின விதம் தான். இப்படிப் பேசுவது எவ்வளவு சிறப்புக்குரியது என்று ஞானி சாலமோன் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம். (நீதி. 25. 11).

"நான் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறேன்" என்ற உண்மையை இயேசு, உலகத்துக்கு உதிர்த்தது கூட, மக்களின் மனநிலையை நாடி பிடித்து பார்த்து, சரியான நேரத்தில் சொல்லப்பட்டதே. சிறப்புமிக்க இவ்வார்த்தைகளின் பின்னணியைக் கொஞ்சம் கவனிப்போம்.

யோவான் அப்போஸ்தலனுடைய நற்செய்தி நூல் மற்ற மூன்றைக் காட்டிலும் வித்தியாசமானது. இயேசுக் கிறிஸ்துவின் தெய்வீகத்தை நிலைநிறுத்துவது தான் இவரின் பிரதான நோக்கம். இதனடிப்படையில் ஜனங்களை நித்திய ஜீவனுக்குள் வழி நடத்துவது. (யோவா. 20 : 30, 31). இவருடைய எழுத்துக்கள் அனைத்தும் இதை மையமாக வைத்தே அமைந்திருக்கிறது. மற்ற மூவருடைய பார்வையின் கோணமும், இவருடைய பார்வையின் கோணமும் வித்தியாசமானதாகவே இருந்தது. இவருடைய புத்தகம் முழுவதும் "ஏழு நானே"க்களையும் "எட்டு அற்புதங்களையுமே" சுற்றி வருகிறது.

ஒரு கட்டத்தில், ஊழியத்தினிமித்தம் எதிர்ப்புகள் ஏராளமாகி, அது இயேசுவின் உயிருக்கே ஆபத்தாக மாறிய போது, அவர் யூதேயாவை விட்டு, கலிலேயாவில் சஞ்சரித்தார் என்று யோவான் எழுதியுள்ளார். (யோவா. 7 : 1) இயேசுவின் வாழ்க்கையில் அந்தக் கால கட்டம் மிகவும் சோதனையானது. உலகத்தார் மற்றும் ஊராரின் ஏச்சுப் பேச்சுக்கு மாத்திரமல்ல, தனது குடும்பத்தாரின் குறை மதியோடு கூடிய பேச்சுக்கும் ஆளாக நேர்ந்தது. ஆம், அவருடைய இளசுகள் கூட அவரை இளக்காரம் செய்தனர். (யோவா. 7 : 4, 5).

எதிர்ப்பும், ஏளனமும், இளக்காரமும் கைகோர்த்து வந்த ஒரு பிரத்தியேகச் சூழ்நிலையில், பக்தியுள்ள யூதர்கள் பங்கேற்க விரும்பும் "கூடாரப் பண்டிகைக்காய்" எருசலேமுக்கு இரகசியமாய் வந்து சேர்ந்தார். தேவன் இஸ்ரவேலர்களை வானந்திரத்தின் வழியாக நடத்தி வந்த போது, முன்னோர்கள் கூடாரங்களில் குடியிருந்ததை இப்பண்டிகை யூதர்களுக்கு நினைவுபடுத்தும். அந்த நினைவுகளில் தத்ரூபமாக மூழ்கி திளைக்க வேண்டுமென்பதற்காக, யூதர்கள் அந்நாட்களில், தங்கள் வீடுகளுக்கு வெளியே, மரக்கிளைகளாலும், மரக் கொத்துகளாலும் வேயப்பட்ட சிறு சிறு குடில்களை அமைத்தும், துணிகளால் ஆன கூடாரங்களை அமைத்தும் குடியிருப்பர். இது ஒரு வார காலத்துக்கு நீடிக்கும்.

இப்பண்டிகைக்கு "சேர்ப்பின் பண்டிகை" என்ற பெயர் உண்டு என்பது பரவலாகத் தெரியும். ஏனெனில், இப்பண்டிகைக்காய் எண்ணெய் மற்றும் கனி வகைகளைச் சேர்த்து வைப்பது வழக்கம். ஆனால், வரலாற்றுப் பின்னணி மிக்க இப்பண்டிகைக்கு "ஒளிப் பண்டிகை" என்ற வேறொரு பெயரும் உண்டு என்பது அநேகருக்குத் தெரியாதது.

"ஒளிப் பண்டிகை" என்பது காரணப் பெயர். ஆம், இப்பண்டிகை கொண்டாடப்படும் ஒரு வார காலத்துக்கும், எருசலேம் பட்டணத்தில் விசேஷித்த ஒளி இருக்கும். அந்த நாட்களில் எழுபது அடி உயரம் கொண்ட நான்கு தூண்களின் மீது, பல பிரிவுகள் கொண்ட விளக்குகள் தேவாலயத்தின் முற்றத்தில் ஏற்றப்பட்டு, பிரகாரங்கள் ஒளியேற்றப்படும். இந்த விளக்குகளின் வெளிச்சத்தில் பண்டிகைக் கொண்டாட்டங்கள் வெகு விமரிசையாக நடக்கும். ஆசாரியர்களின் பின்னால் அணி வகுக்கும் ஒரு கூட்டம், அருகிலுள்ள சீலோவாம் குளத்துக்குச் சென்று, தண்ணீர் கொண்டு வந்து பீடத்தின் மேல் ஊற்றி மகிழ்வர். இன்னும் அநேகர் பலிபீடத்தை சுற்றி வருவர். இவர்களின் மத நம்பிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, விளக்குகளின் ஒளிப்பிரவாகம் மிகப் பிரயோஜனமாக இருக்கும்.

பண்டிகை நாட்கள் நிறைவேறும் போது, விளக்குகள் இறக்கப்பட்டு அணைக்கப்படும். அப்பொழுது மீண்டும் அவர்கள் இருளுக்குள் பிரவேசிக்க வேண்டி வரும். உயரமாக ஏற்றப்பட்ட விளக்குகளின் வெளிச்சத்தில் வெகு விமரிசையாக பண்டிகை கொண்டாடியவர்களுக்கு, விளக்குகள் அணைக்கப்பட்டவுடன் "பொக்"கென ஆகிவிடும். மன ரீதியாக ஒரு தொய்வும், பண்டிகை இனி எப்பொழுது வரும் என்ற ஏக்கமும் மேலோங்கி, முடிந்து போன பண்டிகை பற்றியும், அணைக்கப்பட்ட விளக்குகளின் வெளிச்சம் பற்றியும் சில நாட்களுக்குப் பெரிதாகப் பேசுவர். இப்படி ஜனங்களின்

நினைவும், பேச்சும் கனிந்து வந்த ஒரு சந்தர்ப்பத்தில் தான், இயேசு தன்னைப் பற்றிய ஒரு மாபெரும் உண்மையை உலகுக்கு வெளிப்படுத்தினார். **"....நான் உலகத்திற்கு ஒளி யாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்"** என்பதே அவ்வுண்மை. (யோவா. 8 : 12).

சரி, இயேசுக்கிறிஸ்து ஒளியாயிருப்பதால் நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I. ஒளியானது நம்மை நமக்குக் காட்டுகிறது :

முதலாவது, இயேசுக் கிறிஸ்து நான் ஒளியாக இருக்கிறேன் என்றது தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக உள்ளது. தன்னை ஒரு பெரிய மனிதராகக் காட்டிக் கொள்வதற்கு, அவர் பயன்படுத்திய வஞ்சக வார்த்தைகள் அல்ல அவை. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஏசாய தீர்க்கன் இது பற்றிக் கூறியுள்ளார். "... கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப்பிடித்து, உம்மைத் தற்காத்து உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்'' என்றான். (ஏசாயா. 42 : 7).

மேலும், யோவான் அப்போஸ்தலன் இந்த ஒளியைக் குறித்துச் சொல்லும் போது, "உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப் பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" என்றார். (யோவா. 1 : 9).

"புதிய உடன்படிக்கையின்படி ஒளி" மற்றும் "எல்லா ஜாதிகளுக்குமான ஒளி" என்று முக்கிய தீர்க்கனாகிய ஏசாயாவும், எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி என்று முக்கிய அப்போஸ் தலனாகிய யோவானும் குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும். இயேசுக் கிறிஸ்து அந்த ஒளிப் பண்டிகையின் முடிவில் தன்னை "ஒளி" என்று உலகுக்கு வெளிப்படுத்திய போது, யூதர்களுக்கு மாத்திரம் ஒளி என்று சொல்லாமல், உலகம் முழுமைக்கும் ஒளி என்றே சொன்னார். நானும் ஒரு ஒளி என்று அவர் சொல்லவில்லை.

ஆகவே, உலக மக்கள் ஒவ்வொருவரும் தாங்கள் யார் என்பதை இயேசுவாகிய ஒளியினிடத்திலிருந்து மாத்திரமே தெரிந்து கொள்ள முடியும். இயேசுவாகிய ஒளி நம்மீது படும்போது அது நம்மை நமக்கு அடையாளம் காட்டுகிறது.

இன்றைக்கு மனிதன் இழந்து போனவனாகக் காணப்பட்டு தடுமாறிக் கொண்டிருப்பதற்குக் காரணம், இயேசுவின் ஒளி அவன் மீது படாததே. தான் யார் என்பதே இன்னும் அவனுக்கு விளங்கவில்லை.

தன் வாழ்வு பற்றி புரியவில்லை. வாழ்வின் நோக்கம் தெரியவில்லை. மறுவாழ்வு பற்றிய தெளிவில்லை. ஆகவே தான் எவ்வளவோ அவன் முயன்றும் ஆன்மீக வாழ்வில் அவனால் தன்னை நெறிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. முயன்று முயன்று தோற்றுக் கொண்டுள்ளான். ஏன் என்ன காரணம்? ஆன்மீக வாழ்வில் இயல்பான ஒரு நாட்டம் இருந்தும் ஏன் இந்த நிலை?

மெய்யான ஒளியாகிய இயேசுவை அவன் புறக்கணித்துவிட்டு மகான்களையும், துறவிகளையும் பின்பற்றி, குதர்க்கமான கொள்கைகளில் தன்னை சிக்கவைத்து, விடுபடும் வழி தெரியாமல் சீரழிந்து கொண்டுள்ளான். பாவத்திலே உழன்று கொண்டிருக்கும் இந்த மாமனிதர்களை நம்பி, பாவ விமோசனம் பெற முடியாது. இன்னும் ஒழுக்கக் கேடுகளைப் போதனையாகத் தரும் விக்கிரக வணக்கத்தாலும் அது முடியாது.

இந்த உலகத்திலே பிறந்து பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்து, ஒளியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற இயேசுவால் மட்டும் மனிதனை மனிதனுக்கு அடையாளம் காட்டி நல்வழிப்படுத்த முடியும். தான் யார் என்பதை அவரை நோக்கும் போது தான் அவன் தெரிந்து கொள்ள முடியும். தன்நிலை அறியாத ஒரு மனுஷன் ஒரு போதும் தேவனுக்குப் பிரியமானவனாக ஜீவிக்க முடியாது. இயேசுக் கிறிஸ்து வார்த்தையாகவும் சத்தியமாகவும் இருந்து நம்மை நமக்குக் காட்டுகிறார். உணர்வடைவோம். நம்மை நாம் அறிவோம்.

## II. ஒளியானது நம்மை தேவனிடத்திற்கு வழி நடத்துகிறது.

ஒருவனின் நிலையை உணர்த்தும் – அவனை அவனுக்குக் காட்டும் வேலையோடு இயேசுக்கிறிஸ்து நிறுத்திக் கொள்வதில்லை. தன் நிலையை உணர்ந்து செயல்படும் மனிதனை, தன்னைப் படைத்த தேவனிடத்தில் வழி நடத்துகிறார். உன்னதத்திலிருந்து வந்த தேவ குமாரன், அழுத்தம் திருத்தமாக இங்கு சொல்வதைக் கவனியுங்கள். “அதற்கு இயேசு : **நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள் . . .**” என்றார். (யோவா. 14 : 6, 7).

அதாவது, நான் நானே வழி, நான் நானே சத்தியம், நான் நானே ஜீவன். ஆம், வேறு யாருமே அல்ல. தேவனிடத்தில் மனிதனைக் கொண்டு போய்ச் சேர்க்கும் வல்லமை, அதிகாரம் வேறு யாருக்கு மில்லை. பாவத்தினால் தன்னை விட்டுப் பிரிந்து போன மனிதனை, தன்னிடமாகச் சேர்த்து, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைச் செய்யும் ஒரே

ஒருவர் இயேசுக்கிறிஸ்து மட்டுமே. வேறு எந்த மனிதனுக்கும், அல்லது அவதாரப் புருஷனுக்கும் அந்த அதிகாரம் இல்லவே இல்லை.

அப்போஸ்தலர் நான்காம் அதிகாரத்தில் பேதுரு, ஜனத்தின் அதிகாரிகள் மற்றும் இஸ்ரவேலர்களின் மூப்பர்களுக்கு முன்பாக குற்றவாளியாக நிறுத்தப்பட்டுப் (4 : 6) பேசினபோது, பரிசுத்த ஆவியினால் நிறைந்து சொன்ன வார்த்தையைக் கேளுங்கள். "வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே (ஒளியாகிய இயேசுவே) மூலைக்குத் தலைக்கல்லானார். அவராலேயன்றி, வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் (4 : 11, 12)

ஒளியாகிய இயேசுக் கிறிஸ்து நானே வழி என்று சொல்வதில் வேறொரு அர்த்தமும் அடங்கியிருக்கிறது. தன்னுடைய சரீரமே வழி என்கிறார். அதாவது சரீரமாகிய சபையே வழி என்கிறார். இயேசுக் கிறிஸ்துவுக்கு ஒரே சரீரம். ஆகவே சரீரமாகிய சபையும் ஒன்றே. (எபே. 4 அதி) ஆனால், இன்று மார்க்க உலகில் ஏராளமான அமைப்புகள் சபை என்ற பெயரில் இயங்கிக் கொண்டுள்ளது. இயேசு, பரலோகத்திற்கு ஒரு வழி தான் உண்டு, அது சரீரமாகிய சபை என்று அடித்துக் கூறும் போது, இயேசுவின் பெயரைச் சொல்லிக் கொண்டு, அவருடைய போதனைக்கு முற்றிலும் விரோதமாக ஏராளமான வழிகளை ஜனங்களுக்குக் காட்டுகின்றனர். இது உண்மையானால், இயேசு, நானும் ஒரு வழி என்று சொல்லியிருந்தாலே போதும் தானே; ஏன் நானே வழி என்று சொன்னார்? சிந்திப்போம்.

பாவ மனிதனைப் பரிசுத்தப்படுத்தி தேவனிடம் சேர்க்கவே இயேசு வந்தார். ஒளியாக இருந்து மனிதனை தேவனிடம் வழி நடத்துகிறார். ஒருவன் விசுவாசித்து (மாற். 16 : 16) மனந்திரும்பி (அப். 2 : 38) அறிக்கையிட்டு (ரோம. 10 : 9, 10) பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறும்போது (அப். 22 : 16) பரிசுத்தமாகிறான். கர்த்தருடைய சபையில், சரீரமாகிய சபையில் சேர்க்கப்படுகிறான் (அப். 2 : 47). இறுதிவரை உண்மையாக இருந்தால் நித்திய ஜீவனை அடைகிறான். தேவாதி தேவனோடு என்றென்றும் வாழ்வான்.

ஆக, ஒளியாகிய இயேசுக்கிறிஸ்து, மனிதனை தேவனிடத்திற்கு வழி நடத்துகிறார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, இயேசுக்கிறிஸ்து எவ்வளவு ஆழமான பொருளில் தன்னை "உலகத்திற்கு ஒளி" என்று

சொல்லியுள்ளார் என்பதை ஓரளவு புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இயேசு இன்னும் எந்தெந்த வகைகளில் ஒளியாக உள்ளார் என்று நிறையச் சொல்ல முடியும். ஏனெனில், அவருடைய வார்த்தைகள் அவ்வளவு அர்த்தம் உடையவை.

இப்பொழுது நாம் பார்த்த இந்த இரண்டு காரியங்களையும் கவனமாக சிந்தித்து, நம் நிலையை சீர்தூக்கிப் பார்ப்போம். அவர் வழியாகவும், சத்தியமாகவும் ஜீவனாகவும் உள்ளார் என்பதை மனப்பூர்வமாக ஏற்று அவர்மூலம் தேவனிடம் சேரும் சிலாக்கியத்தைப் பெறுவோம்.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

**S. ராஜநாயகம்**


*ஜெபியுங்கள்!* *பங்கு பெறுங்கள்!!*

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார் நடத்தும்**
**வேனிற்கால முகாம் மற்றும்**
**திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்**

*இடம் : ஏலகிரி மலை (வேலூர் மாவட்டம்)*
*நாள் : மே மாதம் 4, 5, 6 (திங்கள், செவ்வாய், புதன்)*

***சிறப்பம்சங்கள் :***

1. கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க அருமையான சந்தர்ப்பம்.
2. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தரும் ஊழியப் பெருமக்கள்.
3. ஆன்மீக மறுமலர்ச்சிக்கு வழிகோலும் பிரசங்கங்கள்.
4. கோடை வாசஸ்தலமாக இருந்தாலும் தங்குமிடம் மற்றும் உணவு இலவசம்.

**பதிவுக் கட்டணம் ரூ. 50/- மட்டுமே.**

*தொடர்பு முகவரி : **கிறிஸ்துவின் சபை***
*195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701*
*Phone : (04257 - 20030)*

*கவனியுங்கள் : குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ளவர்களே தங்க இட வசதியுண்டு. ஆகவே முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

# ஆராதனையிலிருந்து நாம் எதை எடுத்து வரவேண்டும்?

தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பவர்களை தேவன் தேடுகின்றார், என்று கிறிஸ்து கூறுகிறார் (யோவா 4 : 23, 24) அது, இரட்சிப்படைந்தவர்கள், தேவனுடைய ஜனங்கள், கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்கள் புதிய ஏற்பாட்டில் சொல்லியுள்ளபடி ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள்தோறும் அவரை ஆராதிக்கும்படியாய் கூடி வரவேண்டுமென தேவன் கேட்கிறார் என்று பொருள் தருகிறது. ஆதிக் கிறிஸ்தவர்கள் இப்படிச் செய்தார்கள் என்று நமக்கு முன்னு தாரணம் உண்டு. (அப் 2: 42, அப் 20 : 7) அவர்கள் வேதாகமத்தைப் படிக்கும்படியாகவும், ஜெபிக்கவும், பாடவும், கொடுக்கவும் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறவும் கூடினார்கள். இதை உறுதி செய்யும் வேறு வசனங்கள் இதோ (எபேசி 5 : 19, II தீமோ 2 : 15, I கொரி 16 : 2.)

ஆகையால், யார் ஆராதிக்கப்பட வேண்டும், யார் ஆராதிக்க வேண்டும், எந்த நாளில் ஆராதிக்க வேண்டும், எப்படி ஆராதிக்க வேண்டும் என்பவைகளை வேத வசனங்களை தெளிவாக்குகிறது. தேவன் தான் ஆராதிக்கப்படத்தக்கவர். நாம் எங்கே ஆராதிக்க வேண்டு மென்றும் சொல்லப்பட்டிருக்கிறோம். “அவருடைய, நாமத் தினாலே இரண்டு அல்லது மூன்று பேர் எங்கு கூடினாலும்” (மத் 18 : 20)

ஒரு கிறிஸ்தவன் வாரத்தின் முதல் நாளிலே, தேவனை ஆராதிக்கும்படியாய் மற்ற கிறிஸ்தவர்களோடு கூடிவந்தால் மட்டும் போதாது, அவன் ஆராதனைக் கேற்ற உண்மையான ஆவியோடும், சுத்தமான இருதயத்தோடும், ஆராதிக்க வேண்டுமென்ற ஆர்வத் தோடும், தாழ்மையான மனநிலையோடு கூடிய பயபக்தியோடும், தேவன் மீதும், சக சகோதர சகோதரிகளின் மீதும் கொண்ட களங்கமற்ற அன்போடும் வரவேண்டும். அவன் மன்னிக்கும் ஆவியையும், மகிழ்ச்சி யான இருதயத்தையும், தன்னுடைய பேச்சிலும் செயலிலும் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்தையும் ஆராதனைக்கு வரும்போது கொண்டு வரவேண்டும்.

ஆராதனை என்பது நாம் தேவனைத் துதித்து மகிழும் ஒரு ஈவு மாத்திரமல்லாமல், இது தேவன் நமக்கு சிறப்பான ஆசீர்வாதங்களைக்

கொடுக்கும் வழியாகவும் இருக்கிறது. நாம் தேவனை அவர் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவு ஆராதித்தோமானால் நாம் ஆராதித்துத் திரும்பும்போது அநேக ஆசீர்வாதங்களை நம்மோடு எடுத்துவர முடியும்.

நம்முடைய தேவனோடும் மற்ற பரிசுத்தவான்களாகிய சகோதர சகோதரிகளோடும் கொள்ளும் ஐக்கியத்தினாலே நாம் மிக அதிகமாக பெலப்படுத்தப்படுகிறோம். இந்தக் காரியங்கள் நம்மை ஊக்கப்படுத்து கிறது. அவர் சொல்லியுள்ளபடி ஆராதிப்பதால், அவரை ஆராதிப்பதால் நாம் ஒரு திருப்தியை அடைகிறோம். தேவன் நம்மோடு கூட இருக்கிறேன் என்று சொன்ன வாக்குறுதியின்படி நாம் அந்த இடத்தை விட்டுக் கடந்து செல்ல முடிகிறது.

நாம் வேதத்தைப் படிக்கும்படியாக, தியானிக்கும்படியாகக் கூடி வந்தபடியால் தேவனுடைய வார்த்தையிலிருந்து பெற்றுக் கொண்ட ஆழ்ந்த அறிவோடு நாம் பிரிந்து செல்கிறோம். நம்முடைய ஜெபங்கள் நம்மை தேவனுக்கு அருகாமையில் கொண்டு சென்றுள்ளது. நாம் அவரைத் துதித்துப் பாடிய பாடல்கள் மூலம் அளவற்ற மகிழ்ச்சியை நம்மில் உண்டு பண்ணினோம். கர்த்தருடைய பந்தியிலே பங்கு பெற்று, கர்த்தர் நம்மை இரட்சிக்கும்படியாய்ச் செய்த மாபெரும் தியாகத்தை நினைவுகூர்ந்தபடியால், நம்முடைய ஒப்புக் கொடுத்தலை புதுப்பிக்கும்படியான உற்சாகமடைந்தோம். இறுதியாக, கர்த்தர் நம்மை ஆவிக்குரிய ரீதியிலும், சரீரப் பிரகாரமாகவும் ஆசீர்வதித்தபடியால் அதற்கு நன்றி செலுத்தும்படியாய் அவர் நமக்குக் கொடுத்ததிலிருந்து அவருடைய நாம மகிமைக்காய் நாம் எதையாகிலும் கொண்டு வரும்படி முடிந்தது. ஒரு கிறிஸ்தவனுக்கு மேற்சொன்ன காரியங்கள் ஆவிக்குரிய ரீதியில் ஒரு உத்வேகத்தைக் கொடுக்க முடியவில்லையெனில், வேறு எதுவுமே கண்டிப்பாக கொடுக்க முடியாது.

அடுத்து, ஆராதனை முடிந்து நாம் திரும்பும்போது கர்த்தருக்காக வாழும்படியாகவும், நாம் சந்திக்கிறவர்களுக்கு முன்பாக ஒரு நல்ல முன்மாதிரியை உண்டாக்கும்படியாகவும், இழந்துபோனவர்களுக்கு தேவனுடைய வார்த்தையைப் பேசும்படியான சந்தர்ப்பத்தைப் பெறும் தகுதியைப் பெற்றுக் கொண்டவர்களாகவும் வரமுடிகிறது. ஏனெனில், நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும்படியும், கனி கொடுக்கும்படியும் செய்கிறது. ஆகையால், எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும், கிறிஸ்துவின் மூலம் நம்மீது ஊற்றப்பட முடியும் (எபேசி 1 : 3).

ஆராதனைக்கு நீ எதை எடுத்துச் செல்கிறாய்? ஆராதனையிலிருந்து நீ எதை எடுத்து வருகிறாய்? நீ பெற்றுக் கொள்ள வேண்டுமானால் கொடுப்பது அவசியம். உங்களுடைய பதில் இல்லையென்று இருக்குமானால், உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் தேவையான மாற்றங்களைச் செய்து, உங்களுடைய பதில் "ஆம்" என்று இருக்கும்படியாய் மாற்றுங்கள். நீங்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுவீர்களானால், நீங்கள் இரட்சிக்கப்பட முடியுமென்று கர்த்தர் சொல்கிறார் (மாற் 16 : 16) அப்பொழுது நீங்கள் ஒரே சபையில் சேர்க்கப்பட முடியும் (அப் 2 : 47) தேவனுடைய பிள்ளையாக இருக்க முடியும் (கலாத் 3 : 26, 27) அது மாத்திரமல்ல கர்த்தரை உண்மையாக ஆராதிப்பவராக ஆகமுடியும் (யோவா 4 : 23) எவ்வளவு எளிமையும், சுலபமுமாகவும் உள்ளதென்று பாருங்கள். அதே சமயம் எவ்வளவு பலனுள்ளதாகவும் இருக்கிறது! உங்களுக்காக முயற்சித்து இதின் பலனை அனுபவியுங்கள்.

**J.C. சோட்.**


# அருமையான வாய்ப்பு

***பரிசுத்த ஆவியானவரின் பணி*** **(170 பக்கங்கள்)** மற்றும் ***புதிய ஏற்பாட்டு ஆராதனை*** **(112 பக்கங்கள்)** ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

**புத்தகம் முற்றிலும் இலவசம்** ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. **15/-**

முகவரி : ***தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்***
தபால் பெட்டி எண் **27**, காங்கயம் - **638 701.**

குறிப்பு : *தயவு செய்து* **M.O.** *மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.*

பெண்கள் பகுதி

# "பெண்கள் பிரசங்கிக்கலாமா"

இன்றைக்கு இருக்கும் பெரும்பாலான பிரிவினைச் சபைகளில் பெண்கள் ஆராதனையில் மிகவும் முக்கிய பங்கேற்று செயல்பட்டு வருகின்றனர். காரணம், இன்றைய சமுதாயம் மிகவும் முன்னேறிவிட்டது, பழங்காலத்தில் சொல்லப்பட்டது போல் பெண்கள் ஒரு அடக்குமுறைக்குள், அதாவது ஆண்களைக் காட்டிலும் சற்று குறைந்தவர்களாய் மதிக்கப்பட்ட காலம் போய், இன்று ஆண்களுக்கு நிகர் பெண்களும் தான் என்று நினைப்பது தான். காலங்காலமாய் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி நீக்கப்பட்டதென்று எண்ணி இப்புதிய சித்தாந்தத்தில் அநேகர் திளைக்கின்றனர். இதன் அடிப்படையில் பெண்கள் போதிக்கின்றனர். பிஷப்களாக உள்ளனர். ஆண்கள் அணியக் கூடிய அங்கி போன்றவற்றை தாங்களும் அணிந்து கொள்கின்றனர்.

இப்புதிய நிலை தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதா? வேதாகமத்தின் கொள்கைகள் அது எழுதப்பட்ட முதல் நூற்றாண்டு காலத்துக்கும், அதற்கு முந்திய காலத்துக்கும் மாத்திரம் பொருந்தக் கூடிய கோட்பாடுகளிலான ஒன்றா? இது தேவச் சித்தத்தின்படியானதாக கொடுக்கப்படாமல் உண்மையாகவே மனிதனிடத்திலிருந்து வந்த வார்த்தையாக இருக்குமானால் நாம் அறியாமையினால் பழங்கால கொள்கைகளினால் அடிமையாக்கப்பட்டிருக்கிறோம் என்பது பொருள். ஆனால், வேதவாக்கியங்கள் ஏவப்பட்டதாய் இருக்குமானால், அது மனிதனுக்காக தேவனுடைய இருதயத்திலிருந்து கொடுக்கப்பட்ட எந்த ஒரு மனிதனும் அதை காலத்துக்கு ஒவ்வாதது என்றும், இக்காலத்துக்கு சம்பந்தம் இல்லாதது என்றும் சொல்வதற்கு அதிகாரம் பெற்றவனாய் இருக்க முடியாது.

இயேசுக் கிறிஸ்து கூறுகையில், என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற

தோன்றிருக்கிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (யோவான் 12 : 48) என்கிறார். மேலும் மத் : 16 : 19-ல் "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்றார். வேத வசனங்களெல்லாம் தேவனுடைய வார்த்தைகள் தான். அவைகள் மனிதனின் கோட்பாடுகள் அல்ல. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" (II தீமோத் : 3 : 16). வேதாகமத்தை எழுதி முடிக்கிற தருவாயில் தேவன் கொடுத்துள்ள எச்சரிப்பைப் பாருங்கள். "இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது, ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார். (வெளி : 22 : 18, 19).

தேவனுடைய வார்த்தைகளை எடுத்துக் கையாளுவதென்பது சாதாரண விஷயமல்ல. அவர் எழுதினதிலிருந்து தனக்கு அதிகாரமிருக்கிறது என்ற எண்ணத்தில் தன்னை தேவனுக்கு மேலாக எண்ணி, எழுதப்பட்டதற்கு விரோதமாக எதையாவது ஒருவன் மாற்றினால் அது அவனுக்கு அழிவைத்தான் கொண்டு வரும். அப்போஸ்தலனாகிய பவுல், கலா : 1 : 6 -9 வசனப் பகுதிகளில் "வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்" என்கிறார்.

வேதாகமத்தில் நாம் பார்க்கும் போது பெண்கள் எழுந்து நின்று பிரசங்கித்தார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் கூட கொடுக்கப்படவில்லை. நிறைய பெண்கள் அவரோடுகூட சென்று அவருக்கும், அவருடைய அப்போஸ்தலருக்கும் அவர்களுடைய தேவைகளில் உதவுவதன் மூலம் ஊழியம் செய்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவர்கூட போதிப்பதற்கென்று நியமிக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் ஏழுபேரை தேர்ந்

தெடுத்து அனுப்பும்போது ஆண்களைத் தான் தேர்ந்தெடுத்தார்களே தவிர பெண்கள் இல்லை. அப்போஸ்தலர்களை எடுத்துக் கொண்டால் அவர்களும் ஆண்களாகத்தான் இருந்தார்கள். பதினோரு பேருடன் பேதுரு எழுந்து நின்று பிரசங்கித்த சம்பவத்திலும் எந்த ஒரு பெண்ணும் எழுந்து போதித்ததாகக் கூறப்படவில்லை.

இயேசுவின் தாயாகிய மரியாள் மற்றவர்களுக்குப் பிரசங்கிப்பதற்கு ஒரு பலமான சாட்சி கண்டிப்பாக அவளுக்கு இருந்தது. மகதலேனா மரியாளை எடுத்துக் கொண்டால் அவள் இயேசு கிறிஸ்துவால் அற்புத விதமாய் குணப்படுத்தப்பட்டவள். அதோடு இயேசு கிறிஸ்து உயிரோடு எழுந்தபோது முதன் முதலாக அவளுக்குத்தான் காட்சியளித்தார். ஆனால் இவர்கள் இருவரில் ஒருவருக்காகிலும் போதிக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. மார்த்தாள், மரியாள் ஆகிய இருவரும் இயேசுவுக்கு மிகவும் பிரியமானவர்களாயிருந்தார்கள். மரித்துப் போன தங்கள் சகோதரனாகிய லாசருவை இயேசுகிறிஸ்து உயிரோடு எழுப்பியபோது அதைப்பற்றி ஒன்றும் அவர்கள் மற்றவர்களை நம்பச் செய்யும் படியாக எதுவுமே பேசவில்லை. இயேசு கிறிஸ்துவோ அல்லது அப்போஸ்தலர்களோ அவர்களை அவ்வாறு பேசும்படியாக கேட்டுக் கொள்ளவுமில்லை.

ஏன் அவ்வாறு செய்யவில்லையென்றால் பெண்களின் பங்கு சமுதாயத்திலாகட்டும், குடும்பத்திலாகட்டும், சபையிலாகட்டும் ஆண்களின் பங்கைப் போல் இல்லாமல் வேறுபட்டே உள்ளது. பொது இடங்களில் தைரியமாய் பிரசங்கிக்கவும், ஆத்தும ஆதாயம் செய்யவும் ஆண்களுக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

பெண்களைப் பற்றிப் பார்க்கும்போது அவர்கள் அமைதியாய் இருந்து கற்றுக் கொள்ளக் கடவர்கள் என்று போதிக்கிறது. "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக் கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே. (I கொரி : 14 : 34, 35).

ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக் கொள்ளக் கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலா

யிருக்க வேண்டும். என்னத்தினா லெனில் முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான். பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும் ஆதாம் வஞ்சிக்கப்பட வில்லை. ஸ்திரீயானவளே வஞ் சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பாட் டாள். (I தீமோத் : 2 : 11 – 14).

மீண்டுமாகப் பார்த்தால், பெண்ணினம் சாத்தானுக்கு தொடர்ந்து செவி கொடுத்தே வருகிறார்கள். அன்று ஆதாம் பெலவீனமுள்ளவனாயிருந்து ஏவாளுடைய பாவத்துக்குத் துணை போனது போல இன்றும் ஆண்கள் பெலவீன முள்ளவர்க ளாயிருந்து தவறு செய்கிறார்கள். ஆகையால் பெண்கள் பிரசங்க மேடைகளில் நின்று பிரசங்கிக் கிறார்கள். தங்களைப் பிரசங்கிக ளென்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்கின்ற சில பெண்களை கவனித்துப் பார்த் தால், பெரும் பாலான வர்கள் தாங்கள் அளிக்கும் செய்தி களிலும், தங்கள் உடைகளிலும், தங்கள் பேச்சுக்களிலும், தீவிர வாதத் தன்மை யுடையவர்களாக இருக்கிறார்கள். அதாவது அத்துமீறி செயல்படுகிறார்கள். சமீப காலத்தில் உலகத்தில் தங்களைப் பெரியவர்கள் என்று அழைத்துக் கொள்கிற இரண்டு பெந்தெ கொஸ்தே பிரசங்கிகள் தங்கள் தலையில் பொய்முடி அலங்காரம் செய்து, மிகப் பெரிய உடை அணிந்து, படோடாபமாக தங்கள் முகத்தை அலங்கரித்து விலையுயர்ந்த நகைகளை அணிந்திருந்தார்கள். ஏவாளு டைய முன்மாதிரியைப் பின்பற்றி தேவன் பெண் களுக்கென சொல்லியிருக்கிற புத்திமதி களுக்கு துளியும் செவி கொடுக் காமல் நடந்து கொண்டால் நிலைமை எப்படி இருக்கும் என்பதற்கு இவர்கள் சரியான உதாரணம்.

எந்தப் பெண்ணும் பிரசங்கிப்பதற்கு தேவன் அனுமதி கொடுக்கவில்லை. எந்தப் பெண்ணும் பிரசங்கிப்பதை தேவன் அங்கீகரிக்கவுமில்லை.

**B.B. Choate** **R.R.Nayagam.**

## ஞானஸ்நானம் பெற தகுதி உடையோர் யார்

| | | |
|---|---|---|
| 1. | பாவிகள் | அப் 2 : 38 |
| 2. | கேள்விப்படுபவர்கள் | ரோமர் 10 : 14 - 17 |
| 3. | விசுவாசிப்பவர்கள் | மாற்கு 16 : 16 யோவா 3 : 16 |
| 4. | மனந்திரும்புவர்கள் | லூக் 13 : 3 அப் 17 : 30 |
| 5. | கிறிஸ்துவை அறிக்கை செய்பவர்கள் | ரோமர் 10 : 9 - 10 |
| 6. | கிறிஸ்துவுக்குள் வாழ விரும்புவோர் | எபே 1 : 3 I பேது 2 : 9 |

# திரும்பி வா!

ஒருவன் எப்படி தேவனை விட்டு விலகி போய் பாவத்தில் விழுகிறான், பிறகு அவன் எப்படி மீண்டும் தேவனிடத்தில் சேருகிறான் என்பது லூக் 15 : 11–32ன் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

அநேகர் குறிப்பாக விளையாட்டு வீரர்கள் தங்களுடைய ஸ்தானத்திலிருந்து விழுந்து போய், மீண்டும் தங்கள் நிலைக்கு திரும்பினார்கள் என்று செய்திகளில் வாசிக்கிறோம்.

பரி–வேதாகமம் ஒரு வாலிபனுடைய வெற்றியுள்ள திரும்புதலைப் பற்றி குறிப்பிட்டுள்ளது.

## I. தேவனை விட்டு விலகுவதற்கான படிகள்

**சுய சித்தம்** (Self will) : என்னுடைய பங்கை எனக்கு கொடு. தான் என்கிற ஆணவம் இவனிடம் காணப்பட்டது. "அழிவுக்கு முன்னானது அகந்தை "நீதி (16 : 18) தேவனுடைய அன்பை பாராமல் பெருமையை மட்டும் பார்த்தால், தேவ அன்பு அதன் மகத்துவம், நமக்கு ஒரு சாதாரணமானதாகத்தான் தெரியும்.

இவன் சுயத்தை சார்ந்த பெருமையுள்ளவன்.

**சுய நலம்** : (Selfishness) எனக்கு கொடு. (நீதி 30 : 15)

பாவம் – நம்மை மற்றவர்களை நேசிக்க இடமளிப்பதில்லை. "உன்னைப் போல் பிறனை நேசி" கிறிஸ்து நம்மை அழைக்கும் போது, "தன்னைவெறுத்து தன் சிலுவையை எடுத்துவா" என்கிறார்.

இவன் முழுமையாக, இவனையே சார்ந்து இவனுக்காகவே வாழ்ந்தான் – அது அழிவுக்குத்தான் கொண்டு போகும்.

**பிரிந்து போகுதல்** : (Separation) "தம்முடையது. எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டு தூர தேசத்துக்கு பிரயாணமாக போனான்.

அவன் போன தேசம். தேவனால் மறக்கப்பட்ட தேசம் மனிதனுக்கு ஜீவன், சுகம், அறிவு, வேலை, குடும்பம் (இவைகள் யாவும் தேவனால் கொடுக்கப்பட்ட கொடை) (Gifts) போன்றவைகளைப் பெற்றுக் கொண்டு,

தேவனை விட்டு, சபையை விட்டு, கிறிஸ்தவன் என்ற பொறுப்பை விட்டு பிரிந்து போகிறான் இன்றைக்கும் போய் கொண்டிருக்கிறான்.

சுய சித்தம், பெருமை இவையிரண்டும் பிரிந்து போகச் செய்யும். (ஏசா 59 : 1, 2).

**உணர்ச்சிகளுக்கு அடிமையாகுதல்** (Sensuality) : "வேசிகளிடத்தில் ஆஸ்தியை செலவழித்துப் போட்டான்".

இன்றைய வாலிபர்களுடைய நிலைமை என்ன? இந்த உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, விளைவைப் பற்றி எண்ணாமல், கெட்டு சீரழிந்து போகிறார்கள்.

**துன்பப்பட்டான்** (Starvation) : "மிகவும் பசி, பன்றிகளின் தவிட்டை உண்ண எண்ணினான்".

ஒருவனுடைய ஆத்துமாவின் பசி. (ஆமோஸ் 8 : 11, மத் 4 : 4) மிகவும் தேவையானது அதைப் போக்க இயேசுவின் வார்த்தையால் மாத்திரமே கூடும். வேதனையானது. ஒருவனுக்கு எல்லாம் இருந்தும் அவைகளை அனுபவிக்க முடியாமல் போவது.

தேவனுக்கு ஸ்தோத்திரம், இந்த கதை துக்கத்துடன் முடியும் கதையல்ல (Pragedy). இந்த வாலிபன் குறிப்பிடத்தக்க வகையில் தன் முன்னிலைக்கு திரும்புகிறான்.

## II. தேவனிடத்தில் திரும்புதல்

**உணருகிறான்** (Realized) "அவன் புத்தி தெளிந்தான்". (He came to himself) தான் யார்? எப்படி இந்த உலகத்துக்கு வந்தான் ஏன்? வாழுகிறான். இந்த வாழ்க்கைக்குப் பிறகு என்ன சம்பவிக்கும் தன்னுடைய விழுந்துபோன நிலையை உணருகிறான்.

**மனந்திரும்பினான்** (Repented) "நான் பாவம் செய்தேன்" (I have sinned) ஒருவன் தான் பாவியென்று உணரும்போது அவனுக்கு ஒரு மீட்பர் தேவை. அவரை நாடுவதும், தேடுவதும் இந்த பாவியின் நிலை.

**தீர்வு காண்கிறான்** "நான் திரும்பி போவேன்" ( I will return) தீர்வை காணாமல் குணநலனில் மாற்றத்தை பார்க்க முடியாது. பிலி 4 : 13ல் என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு.

**திரும்பி போனான்** (Return) "எழுந்து புறப்பட்டு தன் தகப்பனிடத்தில் வந்தான்"

ஒப்புரவானான் (Recoalihation)

"மறுபடியும் உடுத்திவிக்கப்பட்டான்"

| | | |
|---|---|---|
| சிறந்த வஸ்திரம் | - | இரட்சிப்பின் வஸ்திரம் |
| மோதிரம் | - | அதிகாரத்துக்கு சுயாதீனன் |
| பாதரட்சை | - | இனி அவன் அடிமையல்ல. |

**மகிழ்ச்சியாயிருந்தான்** (Rejocing) "காணாமல் போனான் திரும்பவும் காணப்பட்டான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்".

**முடிவாக :** நண்பனே! ஒருவேளை நீ கூட இன்றைக்கு திரும்பி வர வேண்டியவனாயிருக்கிறாய். கிறிஸ்து உன்னுடைய திரும்புதலுக்கு, வெற்றிகரமாய் உதவி செய்வார். நீ வீட்டுக்கு (சபையாகிய தேவனுடைய வீட்டிற்கு) திரும்பி வர வேண்டுமென்று விரும்புகிறோம்.

நாங்கள் இதோ! இப்பொழுதே!!

உன்னை வரவேற்க தயாராகி விட்டோம்!!!

**வே. *தானியல் துரைராஜன்,*** திருச்சி.


# மற்றுமோர் வாய்ப்பு

***திருமறை ஆசான்*** மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. **E.Z. செல்வநாயகம்** அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து ***"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்"*** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப் பட்டுள்ள இந்நூல் சுமார் **250** பக்கங்களைக் கொண்டது.

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது.

***புத்தகம் முற்றிலும் இலவசம்.*** தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. **15/-** மாத்திரமே.

முகவரி : ***தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்***
**தபால் பெட்டி எண் 27, காங்கயம் - 638 701.**

குறிப்பு : *தயவு செய்து **M.O.** மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.*

# "உங்களுடைய பக்தியை சோதித்தறியுங்கள்"

பரிசுத்த வேதாகமத்திலுள்ள புத்தகங்களில் ஒரு சிறிய புத்தகமாக யாக்கோபு எழுதின நிருபம் இருந்தாலும், இது நமக்குப் பயன்தரும் பல சிறப்பான செய்திகளை தனக்குள்ளாக அடக்கியுள்ளது. கிறிஸ்தவம் ஒரு அன்றாட மார்க்கம் என்பதை இந்நூல் வலியுறுத்திக் கூறுகிறது. அநேக சமயங்களில் நாம் நம்முடைய மார்க்கத்தைக் குறித்து பெருமை பாராட்டுகிறோம், ஆனால் நம்முடைய வாழ்வில் அதை நடைமுறைப் படுத்துகிறோமா? நாம், நமது மார்க்க நீதிகளை நடைமுறைப்படுத்தா விட்டால், நம்முடைய மார்க்கம் வீணான மார்க்கம் என்று யாக்கோபு கூறுகிறார்.

யாக்கோபு 1 : 26 இப்படிச் சொல்கிறது. "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவன் என்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்". ஒரு கிறிஸ்தவனாயிருந்து நாம் மற்றவர்களிடம் பேசும் போது, நம்முடைய மார்க்கம் எதை வெளிப்படுத்துகிறது? ஜனங்களுடனான நம்முடைய அன்றாட பழக்க வழக்கங்கள் எதைப் பிரதிபலிக்கிறது?

நம்முடைய மார்க்கம் இயேசுக் கிறிஸ்துவினுடைய வாழ்க்கை மற்றும் அவருடைய கிரியைகளை அடிப்படையாகக் கொண்டது. அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறபடியால் ஒவ்வொரு நாளும் அவரைப் பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். (யோவா. 14 : 6). இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றுவது தான் கிறிஸ்தவமாகும். கிறிஸ்து நம்முடைய அன்றாட வாழ்வில் காணப்படுவாராக!

யாக்கோபு மூன்றாம் அதிகாரத்தில் நாவைக் குறித்து ஆசிரியர் பேசுகிறார். சரீரத்தில் நாவு சிறிய அவயவமாயிருந்தும், அநேக சமயங்களில் அதை அடக்குவது மிகுந்த சிரமம் என்று கூறுகிறார். "பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும் படிக்கு அவைகளில் வாய்களில் கடிவாளம் ~~போட்டு~~, அவைகளுடைய முழுச் சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா

பெரியவைகளாயிருந்தாலும் கடுங்காற்றுகளால் அடிபட்டாலும் அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும், பெருமையானவை களைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டை கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது. சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர் வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனிதனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. (யாக். 3 : 3–8). எவ்வளவு நேர்த்தியாக யாக்கோபு ஆசிரியர் நாவின் இயல்பை விவரித்திருக்கிறார் பாருங்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய அன்றாட வாழ்வில் நாவுகளை உபயோகிக்கும் போது மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நாம் மற்றவர்களோடு பேசும்போது, நாம் யார் என்பதை அது வெளிப்படுத்தும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய நாவு விஷயத்தில் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். “கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள் (எபே. 4 : 29) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

நம்முடைய கர்த்தர் ஒருபோதும் தன்னுடைய நாவை வீணாக உபயோகித்ததில்லை. ஏனெனில், “அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை” என்று அவரைப் பற்றி எழுதியுள்ளது. (I பேது. 2 : 22). மேலும், பேதுரு இவ்விதம் கூறுகிறார், “ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டு மென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து . . . “ (Iபேது 3 : 10) இன்னும் அப்போஸ்தலன் பவுல் பிலிப்பியரில், “. . . . கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்” என்கிறார் (பிலி. 1 : 27).

அடுத்து முக்கியமாக நாம் பார்க்க வேண்டுவது யாதெனில், மற்றவர்களுடனான நம்முடைய காரியத்தில் நாம் எப்பொழுதும் மிகுந்த

கவனமாக இருக்க வேண்டுமென்பது. தன்னால் ஆனமட்டும், நன்முறையில் நடந்து கொள்ள வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாயிருந்து நற்கிரியைகளைச் செய்யும்படியாய் நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். எபேசியர் 2 : 10ல் பவுல் இவ்விதம் கூறுகிறார். "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள், சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம் . . .". நாம் மற்றவர்களோடு பழகும்போது, நம்முடைய ஆளுமை எதைப் பிரதிபலிக்கிறது? நாம் மோசமான, அசிங்கமான மனோபாவம் உள்ளவர்கள் என்று பிரதிபலிக்குமா? இல்லை, நாம் உண்மையாகவே கிறிஸ்துவின் சிந்தையுள்ளவர்களாயிருந்தால், நாம் யாரை விசுவாசிக்கிறோமோ அல்லது நாம் யாருக்குச் சொந்தமோ அவருடைய தன்மையை அது பிரதிபலிக்கும். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக் கடவது (பிலி. 2 : 5) நமக்கு உண்மையாகவே கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறதா?

கிறிஸ்தவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள் (I பேது. 2, தீத். 2 : 12 – 14) அவர்கள் வேறுபட்டவர்கள் (II கொரி 6 : 17) அவர்கள் உலகத்துக்கு வெளிச்சமும், பூமிக்கு உப்புமானவர்கள். இயேசுக் கிறிஸ்து இதை மலைப்பிரசங்கத்தில் சொல்லியுள்ளார். மலையின் மேலிருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. (ஆம், உங்கள் நற்கிரியைகளும், மனுஷரால் பார்க்கப்படும், மறைந்திருக்கமாட்டாது) . . . தொடர்ந்து, இயேசு, "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" (மத். 5 : 13 – 14).

இயேசுக் கிறிஸ்து நம்முடைய கர்த்தர். பூமியிலே வாழ்ந்த எல்லோரிலும் மேலானவராயிருந்து, மிகச் சிறந்த முன்மாதிரியை வைத்துள்ளார். அவருடைய வாழ்க்கை நற்கிரியைகளால் நிறைந்திருக் கிறது. ஜனங்களுடனான அவருடைய பழக்கமும், செயல்பாடும் போற்றுதற்குரியது. எப்பொழுதும் சிறந்ததையே செய்தார். அவருடைய சித்தத்தின் வழியில் நாம் நடப்போமாக! நாம் அப்படிச் செய்வோமானால், கிறிஸ்தவத்தை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க எப்பிரச்சினையும் இராது. நாம் அவருடைய மாதிரியைப் பின்பற்றும்படி, நமக்காகப் பாடுகள் பட்டு, நமக்கு மாதிரியைப் பின் வைத்துப் போயுள்ளார்.

FRANCIS DAVID EZSR.

# ஆமோஸ் தீர்க்கதரிசன புத்தகம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | ஆமோஸ் தீர்க்கன் |
| பெயரின் பொருள் | : | சுமை தாங்குகிறவன் |
| காலம் | : | கி.மு. 755 |
| யாருக்கு | : | வடக்கு இராஜ்ஜியமாகிய இஸ்ரவேலுக்கு |
| விவாதப் பொருள் | : | யெகோவா நீதிபரர் |
| சிறப்பு | : | நீதி தீர்க்கதரிசி |

## புறக் குறிப்பு

| | |
|---|---|
| I தேசங்களுக்கு எதிரான நியாயத் தீர்ப்பு | 1–2 அதி. |
| II இஸ்ரவேலுக்கு எதிரான நியாயத் தீர்ப்பு | 3–6 அதி. |
| III எதிர்காலத்தைக் குறித்த தரிசனங்கள் | 7–9 அதி. |

## இது தரும் பாடங்கள்

1. தேவன் உலகம் முழுமைக்கும் தேவனாக உள்ளார். இஸ்ரவேலுக்கு மாத்திரம் தேவன் என்று அவர் சொல்லப்படவில்லை.
2. சிலாக்கியங்கள் எப்பொழுதும் பொறுப்புணர்வைக் கூட்டுகிறது.
3. பொறுப்பற்ற தன்மை தண்டனையைப் பெற்றுத் தரும்.
4. தாங்கள் அறிந்திருக்கிறதின்படி வாழ ஒவ்வொருவரும் கடன் பட்டிருக்கிறார்கள்.
5. சோம்பலும், நிர்விசாரமான தன்மை பாவத்தின் வாசலைத் தட்டச் செய்யும்.
6. பாவம் தண்டிக்கப்படாமல் இருக்காது.
7. நேர்மையற்ற, சுய இஷ்டமான ஆராதனை தண்டனைக்கு ஏதுவானது.
8. ஜனங்கள் மாறவில்லை. "நீங்கள் பாவத்தில் வாழ்கிறீர்கள்" என்னும் செய்தி ஊழியர்களுக்கு இன்றும் பெரும் பிரச்சினையாகவே உள்ளது.
9. தேவன் உலகத்தை ஆண்டு, தன் முழு கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.
10. தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டுமென்ற விருப்பம் இல்லையெனில், நாம் தேவனுக்குச் செய்யும் ஆராதனை வீணாகும்.
11. மனிதனை எச்சரிப்பதில் தேவன் பொறுமையுள்ளவராக இருக்கிறார். ஆனால், முடிவில்லாமல் எச்சரித்துக் கொண்டிருக்கமாட்டார்.

# உங்களுக்கு ஒரு வேதாகமம் தேவை

வேதாகமத்தைக் குறித்து அறிந்து கொள்ள கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வரவேற்கிறேன். தேவனின் சித்தத்தைத் தெரிந்து கொள்வதும், அதற்கு கீழ்ப்படிவதுமே நமது லட்சியம். அனைவருமே இப்படி செய்தால் எவ்வளவு அருமையாக இருக்கும்.

நாம் "நீங்கள் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையை தொடங்குவது எப்படி?" என்பதைக் குறித்தப் பாடத் தொகுப்பில் ஈடுபட்டிருக்கிறோம். சபை மிகவும் முக்கியமானது ஆகும். நீங்கள் அதன் அங்கத்தினராய் இராவிட்டால் அதில் எப்படி பங்கு பெறுவது என்பதைக் குறித்து சொல்ல விரும்புகிறோம். மேலும் நீங்கள் வசிக்கும் பகுதியில் இந்த சபை மக்களே இல்லாவிட்டாலும் சபை எப்படி தொடங்க முடியும் என்பதைக் கூறுவோம்.

நாம் இங்கு பேசக்கூடிய சபை வேறு ஒரு சபையோ, நாமகரண கூட்டமோ, மனிதனால் உண்டாக்கப்பட்ட நிறுவனமோ அல்ல. ஆனால் வேதாகமத்தில் வாசிக்கக்கூடிய சபையைப் பற்றி பேசுகிறோம், கிறிஸ்துவினுடைய சபை, அவர் நாமத்தைத் தரித்த சபை. ஒவ்வொரு பாடத்திலும் சபையைப் பற்றி நாம் சில வேதாகம உண்மைகளை சிந்திக்கப் போகிறோம். ஒவ்வொரு பாடத்தையும் நீங்கள் படிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

தேவன் மனிதனுக்கென்று ஒரு திட்டம் வைத்திருந்தார், காரணத்தோடு அவனை இங்கு படைத்தார், வேலையை கொடுத்தார், அவன் ஆத்துமாவிற்காக ஒரு வீட்டை ஏற்படுத்தினார் என்பவைகளை உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறோம். அவைகளெல்லாம் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் உங்களுக்கு ஒரு வேதாகமமோ அல்லது ஒரு புதிய ஏற்பாடோ தேவை. உங்களைக் குறித்த தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ள வேண்டுமானால் அதற்கு வேதாகமமே சிறந்ததாகும்.

உங்களிடம் ஒரு வேதாகமம் இருக்கும் என்று நம்புகிறேன். இல்லையென்றால் தயவுசெய்து ஒன்று வாங்கிக் கொள்ளுங்கள். புத்தக சாலைகளிலோ, வேதாகமச் சங்கங்களிலோ அல்லது சபைகளிலோ உங்களுக்கு அது கிடைக்கும். சிறப்பாக மொழியாக்கம் செய்த வேதாகமத்தையோ அல்லது மற்றெந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழியாக்கம் செய்த வேதாகமத்தையோ பயன்படுத்த உங்களை

ஊக்குவிக்கிறேன். பல்வேறு மொழியாக்கங்கள் உள்ளன. ஆனால் அவைகளுள் பல பழைய மொழியாக்கங்களை விட தரம் குறைவானதாக உள்ளன.

முதலாவதாக, வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை நீங்கள் உணர வேண்டும். அது மனிதனைக் குறித்த தேவனுடைய இறுதி வெளிப்பாடு அல்லது சித்தம். வேதாகமத்தில் அதன் ஆசிரியர், அது எழுதப்பட்டதன் நோக்கம் அல்லது பரிசுத்த ஆவியின் தூண்டுதல், மற்றும் அதனை இறுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் வசனங்கள் அநேகம் உள்ளன. II தீமோத் 3 : 16, 17ல் பவுல் இவ்வாறு சொல்லுகிறார். "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளு தலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது". அது சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்திற்கு ஒப்பிடப்படுகிறது. (யாக் 1 : 25). வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என்று கிறிஸ்து கூறினார் (மத் 24 : 35). நாம் அதில் ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ, பிரதியிடவோ கூடாது. (வெளி. 22 : 18, 19, கலா. 1 : 6 – 9) நாம் வசனத்தின்படி நடக்கிறவர்களாய் இருக்க வேண்டும் (யாக். 1 : 22). ஒரு நாள் அவர் வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் (யோவான் 12 : 48).

ஆனால், உங்களிடம் வேதாகமம் இருந்தால், அதனை சரியாக பகுத்தறிய உங்களுக்கு தெரிய வேண்டும். (II தீமோ. 2 : 15) அப்படியென்றால் வேதாகமத்தில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரு பெரும் பிரிவுகள் இருப்பதை நீங்கள் உணர வேண்டும். பழைய ஏற்பாடு என்பது சிருஷ்டிப்பில் தொடங்கி கிறிஸ்து சிலுவையில் மரித்ததோடு முடியும். அது அந்தக் காலத்தில் மக்களுக்காக தேவன் ஏற்படுத்திய பிரமாணமாகும். ஆனால் கிறிஸ்து ஒரு புதிய சித்தத்தை அல்லது பிரமாணத்தைக் கொடுத்தார். அதனால் முதலில் இருந்தது பழமையானது. அதைவிட சிறந்த பிரமாணத்தை நாம் கடைபிடிக்கவே அது நீக்கப்பட்டது. எபிரேய எழுத்தாளர், கிறிஸ்துவையும் இந்த மாற்றத்தையும் குறித்து பேசும்போது கூறியதாவது : "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். (எபி. 10 : 9, 10.) நாம் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழுகிறபடியால் பழைய பிரமாணத்திற்கு நாம் கட்டுண்டவர்களல்ல.

பழைய ஏற்பாடு தேவனுடைய வார்த்தை. அது மிகச்சிறந்த நோக்கத்தை பூர்த்தி செய்கிறது. அது மனிதனின் வரலாற்றை நமக்கு தருகிறது. தேவனுக்கும் மக்களுக்கும் இருந்த உறவை நமக்கு வெளிப் படுத்துகிறது. அது தேவனுக்கு கீழ்ப்படிந்த மக்கள் பெற்ற ஆசீர்வாதத்தையும், கீழ்ப்படியாத மக்கள் பெற்ற தண்டனையையும் குறித்து உதாரணங்களை நமக்கு தருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும், அவரது மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலைக் குறித்தும், ஏராளமான தீர்க்கதரிசனங்களை நமக்கு தருகிறது. மேலும் புதிய ஏற்பாட்டை நாம் பார்த்தோமானால், அவைகளெல்லாம் நிறைவேறி இருப்பதை நாம் காணலாம். அதனால், பழைய ஏற்பாட்டிற்கு பல நோக்கங்கள் உண்டு. ஆனால் நாம் அதனை பிரமாணமாக கைக்கொள்ள முடியாது. அதன் மூலம் இரட்சிக்கப் படுவோம் என்றும் எதிர்பார்க்க முடியாது.

புதிய ஏற்பாடு இன்றைய மனிதனுக்காக தேவனின் சித்தத்தை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின்மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலில் தொடங்கி, எவ்வாறு சபை நிறுவப்பட்டது என்றும், எவ்வாறு உலகெங்கும் சுவிசேஷம் எடுத்துச் செல்லப்பட்டது என்றும் நமக்கு காட்டுகிறது.

இவைகளை மனதிற்கொண்டு எபிரேய எழுத்தாளர் கூறியதாவது :"பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்". கிறிஸ்து மறுரூபமானபோது, தேவன் வானத்திலிருந்து பேசினார். "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்கு செவிகொடுங்கள்" (மத். 17 : 5). எனவே கிறிஸ்துவுக்கே நாம் செவிகொடுக்க வேண்டும் என்பதில் சந்தேகமே இல்லை. மேலும் கிறிஸ்துவின் பிரமாணங்களை கொண்டுள்ள புத்தகம் புதிய ஏற்பாடே என்பதிலும் சந்தேகமே இல்லை.

இப்பொழுது, தேவனுடைய வார்த்தையை நாம் படிக்கும்போது சிலவற்றை நம் மனதில் கொள்ள வேண்டும் என்பது அவசியம். முதலில், அது மனிதனின் வார்த்தை அல்ல, தேவனின் வார்த்தை என்பதை உணர வேண்டும். அதனால் அதை நாம் அப்படியே ஏற்றுக் கொள்ளவும், அதற்கு பணியவும் வேண்டும். நாம் அதனை உதாசீனப்படுத்தவோ, அதனைக் குறித்து விவாதிக்கவோ அல்லது கேள்வி கேட்கவோ கூடாது. தேவன் அதனை கூறியுள்ளார் அதுவே தீர்வாகும்.

இரண்டாவதாக, தேவனுடைய வசனம் நம்மை பிரிக்க முடியாது அல்லது வேறுபடுத்த முடியாது. வேதத்தின் போதனைகளைப் பின்பற்றுவதாக கூறிக் கொள்ளும் பல மக்கள், அவர்கள் போதனையிலும், அவர்கள் செயலிலும் மாறுபட்டிருக்கிறார்கள் என்பது நாம் அறிந்ததே. இது சாத்தியமா? நிச்சயமாக கிடையாது. கர்த்தர் நம்முடனே பேசியிருக்கிறார். நாம் அவர் வார்த்தைகளை விசுவாசிக்கும் பொழுது, அவர் போதனைகளுக்கு கீழ்ப்படியும் பொழுது நாம் அனைவரும் ஒன்றாகிறோம். அதாவது நாம் அனைவரும் ஒன்றையே விசுவாசிப்போம், ஒரே மாதிரியான இரட்சிப்படைவோம், ஒரே சபையின் அங்கத்தினர்களாகுவோம், கூடி ஆராதிப்போம், ஒரே நம்பிக்கை உடையவர்களாய் இருப்போம். யோவான் 17 : 20 – 23ல் ஒன்றாய் இருக்கும்படி ஜெபம் பண்ணினார். கர்த்தரின் மக்கள் ஒன்றாய் இருப்பதை நீங்கள் புதிய ஏற்பாட்டில் காணலாம். அப்படியானால் இன்றைக்கு பிரிந்து காணப்படுவது கர்த்தருக்கு ஏற்றதாய் இருக்குமா? மூன்றாவதாக, கர்த்தரின் வார்த்தையே இறுதியானது. இன்றைய மனிதனுக்காக அவரிடம் புதிய செய்தி எதுவுமில்லை. மேலும் இனிவரும் நாட்களிலும் அவர் எந்த புதிய வெளிப்பாடுகளையும் தரபோவதில்லை. கர்த்தர் தன்னுடைய சித்தத்தை மனிதனுக்கு தெரியப்படுத்திவிட்டார் அதை முழுவதுமாக வெளிப்படுத்திவிட்டார். வேறு ஏதாவது கூறவேண்டியது இருந்திருந்தால் அதனை அவர் கூறியிருப்பார். ஆனால் நாம் வைத்திருப்பதைத்தான் அவர் கொடுத்தார். அதனால் அவர் இனிமேல் எதுவும் கொடுக்கப்போவதில்லை என்று நாம் முடிவு செய்ய வேண்டும். மேலும் சிலர் தம்முடனே தேவன் பேசியதாக கூறுகிறார்கள், ஆனால் எதற்காக? வேதாகமத்தில் வெளிப்படுத்திய அதே செய்தியை கொடுக்க அவர் ஏன் ஒருவரிடம் நேரிடையாக பேச வேண்டும்? ஒருவேளை புதிய வெளிப்பாடுகளை தந்தால், ஒருவரிடம் மட்டும் கொடுத்து, மற்றவர்களுக்கு கொடுக்காததால் அவர் பாரபட்சமுள்ளவராய் இருக்கிறாரல்லவா? தேவன் தம்முடனே பேசியதாக கூறுபவர்கள், தமக்கு ஏதோ செய்தியைத் தந்தார் என்பார்கள். ஆனால் அது எழுதப்பட்ட வசனம் கூறுவதைப் போல் இல்லாமல் முற்றிலும் மாறுபட்டிருக்கும். அப்படியென்றால் தேவன் தான் சொன்ன வார்த்தையிலிருந்து மாறுபடுகிறார் என்பதாகும். நாம் இதை நம்பமுடியுமா? முடியாது. ஆகையால் தேவன் தான் சொன்ன வார்த்தையை சொல்வதில்லை என்று நாம் முடிவு செய்யலாம். நாம் தேவனுடைய சித்தத்தை அறிய வேண்டுமானால் வேதத்தை நாட வேண்டும். ஒருவன் தன்னிடம் தேவன் தனிப்பட்ட வெளிப்பாட்டை தந்தார் என்று சொன்னால் அவன் ஏமாறுகிறான். நான்காவதாக, நாம் ஒரு நாள் கர்த்தரின் வார்த்தையினால் நியாயந் தீர்க்கப்படுவோம். (யோ.

12 : 48). அது என்ன வார்த்தை? அது வேதாகமத்தில் காணப்படுகிற வார்த்தை. ஆகையால், வேதாகமத்தில் வாசிக்கின்ற வார்த்தையே நியாயத் தீர்ப்பின் நாளில் நம்மை நியாயந்தீர்க்கும். நாம் ஒரு பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து இன்னொரு பிரமாணத்தின் கீழ் நியாயந்தீர்க்கபடுவதில்லை. எழுதப்பட்ட வார்த்தையில் அவருக்கு வேண்டியது எதுவோ, நியாயத் தீர்ப்பிலும் அவருக்கு வேண்டியது அதுவே. நம் சூழ்நிலைக்கேர்ப அவர் அதை மாற்றமாட்டார். ஆகவே, அவர் என்ன கட்டளையிட்டாரோ அதன்படியே நடக்க நாம் மிகவும் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். நாம் அவருடைய போதனைகளில் ஒன்றையாவது உதாசீனப்படுத்துவோமானால் நியாயத்தீர்ப்பின் நாளில் நாம் அவர் முன்பாக நிற்கும் பொழுது அவர் நம்மை உதாசீனப் படுத்துவார். நாம் அவர் வார்த்தையின் மேல் விசுவாசம் வைத்து, கீழ்ப்படிந்து, அதன்படி வாழ்வோமாகில் நியாயத் தீர்ப்பின் நாளில் அது நமக்கு ஆசீர்வாதமாய் இருக்கும்.

அன்பானவர்களே, உங்களிடம் வேதாகமம் இருக்கும் என்று நம்புகிறேன். இல்லையென்றால், சிறப்பு முயற்சி எடுத்து அதை நீங்கள் பெற்றுக்கொள்ள உங்களை ஊக்குவிக்கிறேன். தேவனுடைய சித்தத்தை அறிய, அதை நீங்கள் வாசித்து, கற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். இயேசு கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்ற விசுவாசத்தை உங்களில் வளர்த்துக் கொள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷ புத்தகங்களை வாசியுங்கள். நீங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள அதாவது கிறிஸ்துவை விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்பை பெறுவது எப்படி என்பதை அறிந்து கொள்ள அப்போஸ்தலர் நடபடிகளை வாசியுங்கள். கர்த்தரின் சபை எப்படி நிறுவப்பட்டது என்பதையும் இரட்சிக்கப்பட்டவர்களை கிறிஸ்து சபையில் எவ்வாறு சேர்த்துக் கொள்ளுகிறார் என்பதையும் அறிந்து கொள்ளவும், இந்த புத்தகத்தை வாசிக்கவும் கிறிஸ்துவ வாழ்க்கை வாழ்வது எப்படி என்பதையும் நித்திய ஜீவனின் நம்பிக்கையை பெறவும் புதிய ஏற்பாட்டின் எஞ்சியுள்ள புத்தகங்களை தொடர்ந்து வாசியுங்கள்.

இதை நீங்கள் செய்யும் பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நாம் இந்த முக்கியமான பாடத் தொகுப்பை படித்துக் கொண்டிருப்பதாலே, அடுத்த பாடப் பகுதியில் எங்களோடே சேர்ந்து கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

*J.C. சோட்* *ஜே. பிக்கின்ஸ், திருச்சி.*

# ஆவியின் கனி

## நற்குணம்

தேவன் மனுஷனை சகல நற்குணமுள்ளவனாக உண்டாக்கினார். அவனை தேவ சாயலாக உண்டாக்கினார். தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது என்று ஆதி 1 : 31 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஆதி 6 : 6ல் தேவன் தாம் மனுஷனை உண்டாக்கிநதற்காக மனஸ்தாபப்பட்டார். அது அவர் இருதயத்துக்கு வசனமாயிருந்தது என்று எழுதப்பட்டுள்ளது. காரணம், தேவனால் உண்டாக்கப்பட்ட எல்லா சிருஷ்டிப்புகளும் இன்றும் அவருடைய மகிமைக்குரியவைகளாய் இருக்கும் போது அவருடைய சாயலாக உண்டாக்கப்பட்ட மனுஷன் தன் நிலையை கெடுத்துக் கொண்டதே "சாலமோன் ஞானி : "இதோ தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார் அவர்களோ அநேக உபாய தந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள். இதை மாத்திரம் கண்டேன் என்று பிரசங்கி 7 : 29ல் கூறுகிறார். "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெறுகிற்று என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்று கர்த்தர் கண்டு மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். ஆதி 6 : 5 – 6 இதை வாசிக்கின்ற அன்பரே உங்களில் உள்ள குணம் தேவனுக்கு மகிமையாக உள்ளதா அல்லது மனஸ்தாபமாக உள்ளதா என்று சிந்தித்து பாருங்கள். நம்முடைய நற்குமம் எல்லா மனுஷருக்கும் விளங்க வேண்டும்.

நான் உங்களை மீண்டும் ருத்தின் சரித்திரத்திற்கே அழைத்து செல்ல விரும்புகிறேன். ருத் இளமையாய் இருந்தும் தன்னுடைய வாழ்க்கையில் எல்லா வழிகளிலும் நல்ல குணமுள்ளவளாக காணப்பட்டாள். அவளுடைய மாமி நகோமி ரூத்தின் இளமையையும், தனிமையையும் குறித்து சிந்தித்து ருத் சுகமாய் வாழ்ந்திருக்கும்படி அவளுக்கு ஒரு வாழ்க்கை துணையை ஏற்படுத்த எண்ணினாள். நகோமி தன் உறவின் முறையாவை போவாஸ் என்பவன் ரூத்தை மனைவியாக ஏற்றுக் கொள்வான் என்று அவனிடத்திற்கு அவளை அனுப்பினாள். ரூத் இவ்விஷயத்தில் தன் மாமி சொன்னபடியே நடந்தாள். ரூத் போவாஸ் என்ற மனுஷனை சந்தித்த போது அவன் "மகளே நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக; நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால் உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம்

உத்தமமாயிருக்கிறது. இப்போதும் மகளே நீ பயப்படாதே; உனக்கு வேண்டி யெல்லாம் செய்வேன்; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள் ரூத் 3 : 10 –11 என்று கூறி அவர்களின் முறைமையின்படி அவளை தனக்கு மனைவியாக ஏற்றுக் கொண்டான்.

நீதிமொழிகள் என்ற புத்தகத்தை எழுதின சாலமோன் குணசாலியான ஸ்திரீயின் கிரியைகளை பட்டியலிட்டு காட்டுகிறார். நீதி 31 : 10–31 ஐ சற்று திருப்பி பாருங்கள். "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்து குறையாது. அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் நன்மையையே செய்கிறாள். உற்சாகத்தோடு வேலை செய்கிறாள். அவள் தன் ஆகாரத்தைக் கொண்டு வருகிறாள். இருட்டோடு எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங் கொடுத்து, தன் வேலைகாரிகளுக்கு படியளக்கிறாள். ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள்; தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சை தோட்டத்தை நாட்டுகளை தன்னை பெலத்தால் இடைக்கட்டி கொண்டு தன் கைகளைப் பலப்படுத்துகிறாள். தன் வியாபாரம் பிரயோஜனமுள்ளதென்று அறிந்திருக்கிறாள்; இரவிலே அவள் விளக்கு அணையாதிருக்கும் தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள்; அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும். சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து, ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள். தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள். தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்கிறது. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல் தன் வீட்டுக் காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாய் இருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்கிறார்கள். அவள் புருஷன் அவளை பார்த்து அநேகம் பெண்கள் குணசாலிகலாக இருந்ததுண்டு. நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான். இவ்வாறு நம்முடைய நற்குணங்களும் மற்றவர்களுக்கு விளங்க வேண்டும். சாலமோன் மேலும் கூறுகிறதாவது "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது. அழகும் வீண், கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரியே புகழப்படுவாள்". நாமும் கர்த்தருக்கு பயந்து அவருடைய கற்பனைகளின் கீழ்படிந்து நடந்தால் நம்மையும் மற்றவர்கள் புகழும்படி நற்குணசாலிகளாக திகழலாம்.

தேவன் நம்மீது அன்பு கூர்ந்து, நாம் கெட்டுப் போகாமல் நற்குணசாலிகளாக திகழும்படிக்கே. தம்முடைய குமாரனாகிய இயேசுவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். இயேசுவை விசுவாசிக்கின்றேன் என்பவர்கள் அவருடைய உபதேசத்தை விசுவாசியாமல் இருப்பது வியப்பாக இருக்கிறது. இயேசு வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் . . . என்கிறார் (யோ 5 : 39) பெரோயா எந்ற பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத

வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகலாயிருந்தார்கள். அப் 17 : 11 வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தால் நாடும் நற்குணசாலிகளாக திகழலாம் நற்குணம் என்பது ஆவியின் கனி. "நான் உங்களுக்கு சொல்லுகிற ஜனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோ 6 : 63 என்று இயேசு கூறுகிறார். வேத வாக்கியங்களால் பிறக்கும் ஆவியின் கனியான அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை. தயவு, விசுவாசம், சாந்தம் இச்சையடக்கம் ஆகியவைகளை இந்த உலகத்திற்கு விளங்க செய்வது ஆவியின் கனியான நற்குணமே ஆவியின் கனி சகல நற்குணத்திலும் விளங்கும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் (எபே 5 : 9) நம்மிலும் ஆவியின் கனி காணப்படுவடியாகவும் அவைகள் இந்த உலகத்திற்கு விளங்கும்படியாகவும் தினந்தோரும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து நற்குணசாலிகளாக திகழ தேவன் கிருபை செய்வாராக.

*ஹென்றி மோகன்*, நீலகரி.

# அழைப்பு

சகோதர, சகோதரிகளே இயேசுவின் அன்பான உருக்கமான அழைப்பை ஏற்றுக் கொண்டு அவரிடம் வாருங்கள் வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக் கொண்டு என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

என் நுகம்மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது. (மத்11:28-30)

*வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே - அன்பும் கரிசனையுமான அழைப்பு.*

*நீங்கள் எல்லோரும், என்னிடத்தில்*
*வாருங்கள் - பாரபட்சமற்ற உலகளாவிய அழைப்பு*

*உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல்*
*தருவேன் - வாக்குத்தத்தம் நிறைந்த அழைப்பு*

*நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய்*
*இருக்கிறேன் - தன்னிலை விளக்க அழைப்பு*

*என் நுகம் மெதுவாயும் என் சுமை*
*இலகுவாயும் இருக்கிறது - பயம் நீக்கும் அழைப்பு*

இன்னும் ஏன் தாமதம்! நிச்சயமான தீர்வு உறுதியாக்கப்பட்டிருக்கிறதே விரைந்து வாரீர்! அவரன்றி இரட்சிப்பு இல்லை. அவரே வழி, அவரே சத்தியம், அவரே ஜீவன்.

(தெரிந்தெடுக்கப்பட்டது)

# பிலிப்புப் பட்டணம்

மக்கதோனிய தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைநகரமாக பிலிப்புப் பட்டணம் விளங்கியது. (அப் 16 : 12) அது வடக்கு கிரேக்கப் பகுதிக்கு நேராக கடலோரப் பகுதிக்கு சுமார் 8 அல்லது 10 மைல் தூரத்திலுள்ள நெயோப்போலி என்ற பகுதியில் அமைந்திருந்தது. இந்த பிலிப்புப் பட்டணம். ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் போகும் வழிப்பாதையில் அமைந்திருந்தது. சுவிசேஷம் அறிவிப்பதற்கும் முக்கியமான இடமாக இருந்தது. அப்போஸ்தலனாகிய பவுல் பொதுவாகவே இப்படிப்பட்ட இடத்தைத் தான் ஊழியத்திற்கு ஆரம்பத்தில் தெரிந்து கொள்வார்.

மக்கெதோனியாவில் பிலிப்புப் பட்டணம் இருந்தது. மகா அலெக்சாண்டர் கி.மு. 360ல் க்ரீனைட்ஸ் என்ற பட்டணத்தைக் கைப்பற்றினார். அதில் ஜனங்களை குடியேறும்படி செய்து அப்பட்டணத்துக்கு பிலிப்புப் பட்டணம் என்று பிறகு பெயரிட்டார். அதன் பிறகு அந்த மகெதோனிய மாகாணமானது ரோமர்களால் கைப்பற்றப்பட்டு நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்த யுத்தமானது கி.பி. 42–ல் பிலிப்புப் பட்டணத்தில் நடந்தது. இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யுத்தமாகக் கருதப்படுகிறது. இங்கு நடைபெற்ற யுத்தத்தில் அந்தோனி மற்றும் ஆக்டேவின் என்பவர்கள் BRUTUS புரூட்டஸ் மற்றும் காசியஸ் என்பவர்களால் தோற்கடிக்கப்பட்டனர். முடிவாக இந்த யுத்தமானது ரோம சாம்ராஜ்யத்தின் வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. (பெற்றுள்ளது.)

அதன்பிறகு பிலிப்புப் பட்டணம் ரோமக் காலனியாக ரோமர் குடியேறும் பகுதியாக மாறியது. அதன் பின்பு லத்தீன் மொழியையும் ரோமர்களுடைய நாணயங்களையும், சட்டங்களையும், கலாச்சாரத்தையும் ஏற்றுக் கொள்ளும்படி கடைப்பிடிக்கும்படி வற்புறுத்தினார்கள். இந்தப் பிலிப்புப் பட்டணம் ரோமர்களுடைய ஆட்சியின் கீழாக வந்து செழிப்பாக இருந்தது. பிலிப்புப் பட்டணத்தில் யூதர்கள் (JEWS) வசித்தனர். ஆனால் அங்கு ஜெப ஆலயம் இல்லை. அந்தப் பட்டணத்தில் மருத்துவ பள்ளி இருந்தது. வைத்தியனாகிய லூக்கா அங்குதான் வசித்துப் படித்துள்ளார். இன்றைக்கு அந்தப் பட்டணம் அழிந்து போய்விட்டது.

பவுல் தனது இரண்டாவது சுவிசேஷ சுற்றுப் பயணத்தின் போது கி.பி. 52ல் முதன் முதல் பிலிப்புப் பட்டணத்துக்கு வந்தார். அப்போஸ்தலர் 16-ஆம் அதிகாரம் பவுலின் இரண்டாவது சுவிசேஷ சுற்றுப் பயணமாகும். ஐரோப்பியக் கண்டத்தில் பவுல் முதன் முதல் பிலிப்புப் பட்டணத்தில் தான் பிரசங்கம் செய்து உள்ளார். மேலும் தனது மூன்றாவது சுவிசேஷ சுற்றுப் பயணத்தின்போது மீண்டுமாக பிலிப்புப் பட்டணத்திற்கு வந்தார். மற்றும் மக்கெதோனிய சபைக்கும் போனார். முதலாவது சந்திப்புக்கும் இரண்டாவது சந்திப்புக்கும் சுமார் (5) ஐந்து ஆண்டுகள் இடைவெளி உண்டு. பவுல் மற்ற சபையாரைக் காட்டிலும் பிலிப்புப் பட்டணத்து சபையாரிடம் நெருங்கிப் பழகினார். அதோடு அன்பும் வைத்திருந்தார். இதை ஒரு அன்பின் கடிதம் அல்லது காதல் கடிதம் என்று கூட சொல்லலாம். இந்த சபையார் பல சந்தர்ப்பங்களில் பவுலுக்காக பண உதவி செய்துள்ளார்கள். (பிலி. 4.15, 16) II கொரி 11 : 9) மேலும் மக்கெதொனி நாட்டு சபை தாங்கள் ஏழ்மையாக இருந்த போதும் மன உற்சாகமாய்க் கொடுத்து பவுலின் ஊழியத்தைத் தாங்கினார்கள். (II கொரி 8 : 1 - 5).

**K. ஜெயக்குமார், அவினாசி.**

# கொர்நேலியு

கொர்நேலியு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். இவன் இத்தாலியா பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதியாக இருந்தான். இவன் யூதன் அல்ல, புறஜாதியான். அப்படி இருந்தும் அவனின் குணத்தை சற்று ஆராய்வோம்.

அவன் தேவ பக்தியுள்ளவனும் தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். இந்தவிதமான தேவபக்தி நம்மிடத்தில் உண்டா? நமக்கு தேவ பயம் உண்டா? நாம் மிகுந்த தருமம் செய்கிறோமா? நாம் தேவனை அடிக்கடி வணங்குகிறோமா : இந்தவிதமான கிரியை நம்மிடத்தில் இல்லை என்றால் நாம் போலி கிறிஸ்தவர்கள். வேஷதாரிகள். பக்தியின் வேஷத்தை தரித்துக் கொண்டு சபைக்குச் செல்லுகிறோம். இந்த உலகத்திற்குரிய வேஷம் தரிக்ககூடாது என்று

வேதம் கூறுகிறது. இடைவிடாமல் ஜெபம் செய்ய வேண்டுமென்று கிறிஸ்தவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது. நாம் ஜெபம் செய்யும் பொழுது தேவனோடு பேசுகிறோம். இந்த சிலாக்கியம் கிறிஸ்தவர் களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று தேவன் அவனவன் செய்யும் பொல்லாப்புக்கு தண்டனை கொடுக்காததால் தேவபயம் அவனிடத்தில் இல்லை. தேவன் மிகுந்த பொறுமையும், அன்பும், இரக்கமும் உள்ளவர். எப்பொழுதாவது மனந்திரும்பமாட்டானா என்று வாசற்படியண்டை காத்துக் கொண்டிருக்கிறார்.

கொர்நேலியு தன் மனைவி பிள்ளைகளையும் தேவனுடைய கட்டளையை கைக் கொள்ளும்படி போதித்திருக்கிறான். அவனுடைய முன்மாதிரி ஜீவியம் தன்னுடைய குடும்பத்தையும் தேவனுக்குப் பயப்படும் குடும்பமாக மாற்றிவிட்டது. இவன் குடும்பத்தை நாம் முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு அவனைப் போல் கிறிஸ்துவுக்குள் ஜீவிக்க வேண்டும். அவனுடைய ஜீவியத்தை தேவன் கண்டு ஒரு தூதனை அனுப்பி பேதுருவை தன் வீட்டிற்கு அழைத்து தேவனுடைய வசனத்தை கேட்குமாறு சொன்னார். வேதம் கூறுகிறது அவன் ஜெபங்களும், தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுவதாக அவர் சந்நிதியில் வந்து எட்டிற்று. நாம் செய்யும் ஜெபம் தேவனுடைய சந்நிதானத்திற்கு எட்டுகிறதா? எட்டவில்லையென்றால் நம் பாவங்களேதடையாக நிற்கிறது என்று தேவன் சொல்லுகிறார். தூதன் சொன்ன பிரகாரம் தன்னிடம் சேவிக்கிற தேவ பக்தியுள்ள ஒரு போர்ச் சேவகனையும் தன் வீட்டு மனுஷரில் இரண்டு பேரையும் அனுப்பி பேதுருவை தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்தான்.

பேதுரு வரும் முன்பே கொர்நேலியு தன் உறவினரையும், தன் சிநேகிதரையும் அழைத்து வந்து தன் வீட்டில் காத்துக் கொண்டிருந்தான். தன்னைப் போல் மற்றவர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற அன்பு அவனிடம் நிறைந்திருந்தது. பேதுரு வந்ததும் தேவ வசனத்தை சொல்லும்படி கேட்டுக் கொண்டான். பேதுரு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அவர்களுக்குப் போதித்தான். தேவனுடைய வசனத்தை கேட்டுக் கொண்டிருந்த யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அதைக்கண்டு பேதுரு அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான். யாவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். **இவ்வளவு தேவ பயம் உள்ளவனாயிருந்தும் இரட்சிக்கப் படவில்லை. தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதற்கு கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்ற பின்பே இரட்சிக்கப்பட்டான்.**

**ஞானம்.**

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO
## SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1 45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/WO/ PP/5
Posted at Erode HPO on 20, Mar 98
Mar 98 THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27, காங்கயம்-638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor S. Rajanayagam

PRINTED MATTER BOOK-POST

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27
KANGAYAM - 638 701.
Ph : 04257 - 20030